

புற்றுநோய் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை துபாய் சுகாதார ஆணைய நிர்வாகக்குழு இயக்குனர்களின் தலைவரும், இயக்குனா ஜெனரலுமான ஹுமைத் அல் கதமி தொடங்கி வைத்த போது எடுத்த படம்.

### கழுத்து சார்ந்த பகுதிகளில் ஏற்படும்

# புற்றுநோய் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம்

துபாய், மே.3–

துபாயில் கழுத்து சார்ந்த பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.

## கையெழுத்து இயக்கம்

துபாய் உள்ளிட்ட அமீரகத்தில் 18 லட்சத்து 20 ஆயிரம் பெண்களுக்கு கழுத்து சார்ந்த பகுதிகளில் புற்றுநோய் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் ஐரோப்பிய கமிஷன் ஆகியவற்றின் ஆதரவுடன் செயல்பட்டு வரும் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து துபாய் ஜுலேகா ஆஸ்பத்திரியில் இந்த புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் மற்றும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இந்த முகாம் மற்றும் கையெழுத்துஇயக்கத்தை துபாய் சுகாதார ஆணைய நிர்வாகக்குழு இயக்குனர்களின் தலைவரும், இயக்குனர் ஜெனரலுமான ஹுமைத் அல் கதமி தொடங்கி வைத்தார்.

## முன்எச்சரிக்கை நடவடிக்கை

அப்போது பேசிய அல் கதமி, "இந்த நோய் தாக்குதலை ஆரம்ப நிலையில் கண்டறிந்து முன்எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் தடுத்துவிட முடியும். பொதுமக்களுக்கு இந்த நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அது முற்றிய நிலையில் பாதிப்புக்கு ஆளாகின்றனர். இந்த நிகழ்ச்சியை பொதுமக்கள் பயன்படுத்தி தங்களுக்கு உள்ள பாதிப்புகளை தெரிந்து கொண்டு சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஜுலேகா ஆஸ்பத்திரியின் ஆஸ்பத்திரியின் இணைத் தலைவர் ஜனுபியா சாம்ஸ், தலைமை நிர்வாகி ஜுலேகா தாவூத், துபாய் சுகாதார ஆணையத்தின் சுகாதார ஒழுங்குமுறை துறையின் இயக்குனர் டாக்டர் லைலா அல் மர்ஷுகி, அபுதாபி இந்திய தூதரக அதிகாரி நீதா பூசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அவர்கள் ஆரம்ப நிலையில் நோயின் அறிகுறியை தெரிந்து கொண்டு அதற்கேற்ப சிகிச்சை முறையை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

அமெரிக்க பல்கலைக்கழகத்தின் மருத்துவ ஆய்வாளர் டாக்டர் பமீலா முன்ஸ்டர் கூறும்போது, "இந்த புற்றுநோய் தாக்குதல் 14 முதல் 45 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கே அதிகமாக உள்ளது" என்றார்.

### சார்ஜாவில்

# கார் மோதி மாணவர் சாவு

சார்ஜா, மே.3–

ஆப்பிரிக்க நாட்டை சேர்ந்தவர் ஐவரிகோஸ்ட் (வயது 23). இவர் சார்ஜா அல் காசிமியா பல்கலைக்கழகம் அருகே வாடகை வீட்டில் தங்கி, பல்கலைக்கழகத்தில் படித்து வந்தார். சம்பவத்தன்று அவர் வீட்டில் இருந்து சைக்கிளில் பல்கலைக்கழகம் சென்ற போது ஒரு கார் மோதியது. இதில் அவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த அந்த மாணவரை அந்த வழியாக சென்றவர்கள் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக இறந்து போனார்.